25th March 1964]

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : சட்டசபையிலே வைக்கப்பட்டிருக்கிற விவரப்படி, "**the draft plans should be got ready by the end of March 1964**" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அப்படி ஒரு டிராப்ட் பிளான் தயாராகி விட்டதா? அப்படியானல் சபை முன்பு அதை வைக்க அரசாங்கம் முன்வருமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் 1964, மார்ச் என்று சொன்னேன். மார்ச் மாதம் இன்னும் முடியவில்லை. இந்த மாதம் முடிந்து அதற்குமேல் பரிசிலனை செய்யவேண்டும். சட்டமன்றக் குழுவை அமைக்கும்பொழுது இதை வைத்து அதற்குப் பிறகு விவாதிக்கலாம்.

Co-operative Spinning Mill, Coimbatore

* 405 *Q.*—SRI K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether a Co-operative Spinning Mill is proposed to be started for the benefit of the workers of textile mills in Coimbatore district; and

(*b*) if so, the present stage of the same?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) The matter is under consideration.

புலவர் கா. கோவிந்தன் : கைத்தறி நெசவாளரைக் கொண்ட ஒரு நூற்பு ஆலையை அமைக்கவும், அவர்களுக்கு வேண்டிய பங்குத் தொகையை அரசாங்கம் கடனாகக் கொடுப்பதற்கும் ஏதாவது திட்டம் இருக்கிறதா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இந்த ராஜ்யத்தில் வைத்திருக்கிற 12 கூட்டுறவு மில்களும் கைத்தறி நெசவாளர்களால் வைக்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய சங்கங்களிலிருந்து நிதி வசூல் செய்யப்பட்டிருக்கிறது. பணம் போதாது என்பதற்காக வெளியார் உதவி என்ற முறையில் சிலர் மட்டும் சேர்க்கப்பட்டிருக்கிறார்களே தவிர முழுவதும் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் தான் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

புலவர் கா. கோவிந்தன் : அமைச்சர் அவர்கள் கைத்தறி நெசவாளர்களைக் கொண்டு நூற்புஆலை என்று சொல்லுகிறார்கள். கைத்தறி நெசவாளர்கள் என்று சொல்லுகிறார்களே தவிர, அதிலே மாஸ்டர் வீவர்கள்தான் இருக்கிறார்கள். உண்மையாகவே தொழில் செய்கின்ற கைத்தறி நெசவாளர்களைக்கொண்ட நூற்பு ஆலையை அமைத்து பங்குத் தொகையை அரசாங்கம் கடனாகக் கொடுத்து துவக்குவதற்கு ஏதாவது திட்டம் இருக்கிறதா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இப்பொழுது பங்குத் தொகை கொடுப்பது எல்லாம், நூல் கூட்டுறவு சொசைட்டிகள் தான். தனி நபர்கள் கூட கொடுப்பதில்லை. சொசைட்டிகள் கொடுக்கிற காரணத்தால் அவர்கள்தான் அங்கத்தினர்கள் என்பது தெளிவாகிறது. மாஸ்டர் வீவர்களுக்கு கூட்டுறவு சங்கம் கொடுக்கவில்லை. அப்படி கொடுக்காததினால் கோபம் கூட இருக்கிறது.

கனம் சபாநாயகர் : கேள்விகள் முடிவடைந்தன.